1986 மே 5]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுபற்றி மின் வாரியத்தினர் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

(ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் வழங்கும் விசைச் செக்குகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், என்.எஸ்.வி. சித்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் வழங்கப்பட்டுள்ள சுமார் 20,000 விசைச் செக்குகளிலுள்ள தயாரிப்பு குறைபாடுகளின் காரணமாக அவை இயங்காமலுள்ளதால் கடன் பெற்றவர்கள் படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கதர்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக இது வரை 3,596 மின்விசைச் செக்குகள் மட்டுமே தனி நபர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. கவன ஈர்ப்பு தீர்மானத்தில் கூறியுள்ளதுபோல், 20,000 விசைச் செக்குகள் வழங்கப்படவில்லை.

ரோட்டரி போன்ற செக்குகளுக்கு அதிக மூலதனம் தேவைப் படுவதினாலும் சிக்கன முறையில் சுலபமாக இயக்கக்கூடிய ஓவர் ஹெட் விசைச் செக்கினை கதர் கிராமத் தொழில் ஆணையம் கண்டுபிடித்தது. இவைகள் 1972-73 முதல் 1980-81 வரை விநியோகம் செய்யப்பட்டன. 1981-82-ல் மேற்படி விசைச் செக்கின் அமைப்பில் மாறுதல் செய்யப்பட்டது. இவ்வாறு

மாறுதல் செய்யப்பட்ட "போர்டபிள் டைப்" விசைச் செக்கு, 1981-82 ஆம் ஆண்டு முதல், கதர் ஆணையத்தின் தொழில்நுட்ப ஒப்புதலுடன், தமிழநாடு அரசு நிறுவனமான "டான்சி" மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றது.

விசைச் செக்கை ஒரு சிறு இயந்திரமாகவே கருத வேண்டியுள்ளது. இவ்விசைச் செக்கினை நிறுவவும், பராமரிக்கவும், பழுது பார்க்கவும் சிறிது அனுபவம் தேவைப்படுகிறது. இந்த அனுபவம் இல்லாதவர் விசைச் செக்கை இயக்கும்போது பினியன், கிரௌன், சாப்ட், பால்பேரிங் போன்ற பாகங்கள் பழுதடைய நேரிடலாம். இவ்வாறான நிகழ்வுகளில் பழுதடையும் பாகங்களை செப்பனிட்டு நிவர்த்தி செய்திட "டான்சி" நிறுவனத்திடம் தொடர்பு கொண்டு, வாரியத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எனவே, விசைச் செக்கு தயாரிப்பில் குறைபாடுகள் உள்ளன என்று கூறுவதற்கில்லை.

அவ்வப்போது தேவையான வகையில் விசைச்செக்கில் அபிவிருத்தியும் (improvement) தேவைப்படுகிறது. நன்றாக இயக்கப்படும் செக்கில் புகாருக்கு இடமிருக்காது. பழுதடைந்திருக்கும் விசைச்செக்குகளை எப்படி பழுதுபார்த்து இயங்க வைக்கலாம் என்பதனைக் கண்டறிய தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர், சென்னை கதர் ஆணைக்குழு இயக்குநர், விசைச் செக்கு உபயோகிப்போர் சங்கத் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் "விவேக்" விசைச் செக்கு தயாரிப்பு உரிமையாளர் மற்றும் தனிப்பட்டவர்கள் ஆகியோர் 22—4—1986 அன்று தென்னாற்காடு மாவட்டம் புதுப்பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினையும் அப்பகுதியில் செயல்படும் விசைச்செக்குகளையும் பார்வையிட்டனர். அப்போது கீழ்க்கண்ட ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன :—

(1) விசைச் செக்குகளின் வடிவமைப்பில் (design) குறைகள் இருந்தால் அவைகளை நிவர்த்தி செய்து மேற்கொண்டு அபிவிருத்தி செய்ய ஆலோசனை வழங்க ஒரு தொழில்நுட்ப குழு அமைக்கலாம்.

1986 மே 5] [திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி]

(2) புதியதாக இத்தொழிலை மேற்கொள்ளும் கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கலாம். ஏற்கனவே இத்தொழிலில் ஈடுபட்டுளளோருக்கு (Beneficiaries) மறு பயிற்சி (Reorientation) அளிக்கலாம்.

(3) பயிற்சி பெற்ற வாரிய அலுவலரைக் கொண்டு விசைச செக்குகளை அவ்வப்போது காலமுறையாக ஆய்வு செய்யலாம்.

இந்த ஆலோசனைகளை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

விசைச் செக்குகள் வாங்கிய வகையில் கடன் பெற்றவர்கள் இன்னல்களுக்கு ஆளாகாமலிருக்க, அவர்கள் கடனை திரும்ப செலுத்தும் காலம், ஐந்து ஆண்டுகளிலிருந்து இப்போது பத்து ஆண்டு காலமாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே 20,000 செக்குகள் வழங்கப்படவில்லை என்றும், கிட்டதட்ட 4,000 செக்குகள் தான் வழங்கப்பட்டிருப்ப தாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் டிக் மூலமாகவும், பாங்குகளின் மூலமாகவும், செயல்பட்டு, 20,000 செக்குகள் வழங்கப் பட்டு, அவர்கள் இன்றைக்கு ஒரு அமைப்பாகவே இயங்கி வருகிறார்கள். இந்தச் செக்குகளை மதுரையிலே நானே நேரிலே சென்று பார்த்தபோது எல்லா செக்குகளும் இயங்கவில்லை. அந்தச் செக்குகளின் டிசைனில் மிஸ்டேக் இருக்கிறது என்றும் சரியாக இல்லை என்றும் தெரிகிறது. அதற்கு 2 ஹார்ஸ் பவர் போட்டிருக்கிறார்கள். அதன்மூலம் டர்ன் அவுட் இல்லை. 3 ஹார்ஸ் பவர் மோட்டார் போட்டுத் தரவேண்டும். அதனுடைய பாகங்கள் எல்லாமே உடைந்திருக்கின்றன. இங்கே அவை பழுதடைந்திருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பழுதடையவில்லை, உடைந்தே போயிருக்கிறது அதனுடைய காயில்கள் நல்ல இரும்பினாலே போடப்படவில்லை. ஆகவே அந்த டிசைனை மாற்றி, நல்ல பரிகாரம் காண்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே விவர அறிக்கையிலே விவரமாகக் கூறியிருக்கிறேன். கதர்த்தொழில் வாரியத்தின்

மூலம் இதுவரை வழங்கப்பட்ட மின்விசை செக்குகள் 3,728. அதிலே இதுவரை வெற்றிகரமாக செயல்பட்டது 3,596, அதிலே இன்னும் வழங்கப்பட வேண்டிய செக்குகள் 132. மொத்தம் இதுவரை நிறுவிய விசைசெக்குகள் 3,483. இன்னும் நிறுவப்பட வேண்டிய செக்குகள் 113. இதிலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 217-ம் தனிப்பட்டவர்கள் மூலம் 2,928-ம் செயல்படுகின்றன. இதுவரை மின் இணைப்பு எதிர்பார்த்து இருப்பவை 338 விசை செக்குகள். மாண்புமிகு உறுப்பினர் அவைக்குத் தவறான கருத்தை இங்கே கூறியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே இந்த மின்விசை செக்குகளில் பினியன், கிரௌன், சாஃப்ட், பால்பேரிங் போன்றவை எல்லாம் பழுதடைகிற நேரத்திலே டான்சி மூலமாக ஆட்களை அனுப்பி பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையில் பல்வேறு மாவட்டங்களில் 107 மின்விசைச் செக்குகள் பழுதுபார்க்கப்பட்டு இருக்கின்றன. 2 எச்.பி. மின்விசைச் செக்குகளை அமைத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக 3 எச். பி. மின்விசைச் செக்குகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதுபோன்ற கோரிக்கை அரசுக்கு இதுவரை வரவில்லை.

***திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரூல்படி ஒரு கேள்விதான். (குறுக்கீடு) புரியவில்லையென்றால் திரும்பப் படித்துப் பாருங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. வேங்கடரமணன் அவர்கள் சொன்ன தகவல் தவறான தகவல் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட தொழிலில் உள்ளவர்கள் என்னிடம் அதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருப்பது எந்த அடிப்படையில் என்று எங்களுக்குத் தெரியவில்லை. பொதுவாகவே அந்தச் செக்குகள் சரியாக இயங்கவில்லை. அவைகளை வாங்கி வைத்திருக்கிறவர்கள் அதனால் நிறைய நட்டம் வந்திருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை பரிசீலிப்பார்களா? ஒரு செக்கின் விலை என்ன? அதனுடைய அவுட்டர்ன் என்ன? எவ்வளவு சாறு பிழியப்

1986 மே 5] [திரு. என். எஸ். வி. சித்தன்]

படுகிறது? வேறு செக்குகளுடன் அவை ஒப்பிட்டுப் பார்க்கப் பட்டனவா? அந்த வடிவமைப்பிலே கோளாறுகள் இருப்பதாகக் கூறுகிறார்களே, அதைத் திருத்தியமைக்க அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் அவர்களே, ஒரு மின்விசைச் செக்கில் ஆண்டு ஒன்றுக்கு எண்ணெயும் பிண்ணாக்கும் உற்பத்தி செய்ததில் 35 கோடி ரூபாய் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவரங்களையெல்லாம் அவர்களுக்கு அனுப்பிவையுங்கள்.

4. அறிவிப்பு.

கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்டமுன்வடிவு.

கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.